
பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டம் தொடங்கப்பட்டு 11 ஆண்டுகள் ஆகிறது. இதன் கீழ் இதுவரை 4.53 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டு ரூ.3.33 லட்சம் கோடி டெபாசிட் செய்யப்பட்டுள்ளது.



# உலகின் வளர்ச்சி இயந்திரம் இந்தியா



முனைவர் டி.கே.ஜெயராமன்
ஆசிய வளர்ச்சி வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணர்
tkjayaraman@yahoo.com

**புத்தாண்டு (2026) பிறந்த பிறகு உலகின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் எதிர்கால முன்னேற்றம் பற்றிய மூன்று முக்கியமான அறிக்கைகள் சர்வதேச அமைப்புகளால் வெளியிடப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபை, உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் 2026 (World Economic Situation and Prospects (WESP 2026) என்ற அறிக்கையை ஜனவரி 8-ல் வெளியிட்டது. உலக பொருளாதார மன்றம் (World Economic Forum), தலைமைப் பொருளாதார நிபுணரின் கண்ணோட்டம்-2026 என்ற வருடாந்திர அறிக்கையை கடந்த 16-ம் தேதி டாவோஸில் வெளியிட்டது. உலகப் பொருளாதார கண்ணோட்டம் 2026 என்ற அறிக்கையை சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) கடந்த 19-ம் தேதி வெளியிட்டது.**

ஐ.நா. அறிக்கையில், 2025-ல் உலகளாவிய வளர்ச்சி 'மிதமானது' என்றும், அது கரோனா தொற்றுக்கு முன்பு இருந்த நிலைகளுக்குக் கீழே தான் இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2026-ல் வளர்ச்சி 2.7% ஆகக் குறையும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது 2025-ல் இருந்த 2.8% வளர்ச்சியைவிட சற்று குறைவானது. உலக வர்த்தக பதற்றம், நிதி அழுத்தங்கள் மற்றும் 'கொள்கை உறுதியின்மை' ஆகியவை முக்கிய தடைகளாகும்.



அதேநேரம், தெற்கு ஆசியா 5.6% வளர்ச்சியுடன் வலுவான இயந்திரமாக இருக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை, 2025-ல் 7.4% என்ற சிறப்பான வளர்ச்சி இருந்தது. ஆனால் 2026-ல் அது 6.6% ஆகக் குறையலாம். அதேநேரம் வலுவான உள்நாட்டு நுகர்வு, பெரும் அரசு முதலீடு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏஐ) ஆகியவை இந்திய வளர்ச்சியின் முக்கிய இயக்கிகளாகக் கருதப்படுகின்றன. அதிகரிக்கும் அமெரிக்க சுங்க வரி இந்தியாவுக்கு அபாயமாக இருந்தாலும், இந்தியா ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்தி, உள்நாட்டு தேவையையும் ஊக்குவிக்க முயற்சிக்கிறது என ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

உலக பொருளாதார மன்ற (டபிள்யூ.இ.எஃப்) ஆய்வில், 2026-ல் உலக பொருளாதார நிலைமை பலவீனமாகும் என 53% நிபுணர்கள் எதிர்பார்ப்பதாக கூறப்பட்டுள்ளது. 2026-க்கான முக்கிய கருப்பொருள்கள் செயற்கை நுண்ணறிவு முதலீடு, கடன் வரம்புகள் மற்றும் வர்த்தக மறுசீரமைப்பு ஆகியவை இருக்கும். ஆசியா உலகளவில் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ள பிராந்தியமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, இந்தியா ஒரு சமநிலை பொருளாதாரம் (Goldilocks Economy) என்றும் கடந்த ஆண்டை விட 'எச்சரிக்கையுடன் பிரகாசமானது' என்றும் கூறப்பட்டுள்ளது.


### இந்தியா சமநிலை பொருளாதாரம்

'கோல்டிலாக்ஸ்' என்ற பெயர், ஒரு ஆங்கிலச் சிறுவர் கதையிலிருந்து (Goldilocks and the Three Bears) வந்தது. அதில் வரும் சிறுமி, தனக்குக் கிடைக்கும் மூன்று உணவுகளில் மிகவும் சூடாக இருப்பதையும், மிகவும் ஆறிப்போனதையும் தவிர்த்து, 'சரியான சூட்டில்' இருக்கும் உணவைத் தேர்ந்தெடுப்பாள். இந்தக் கதை குறிப்பிடுவது என்னவென்றால், இந்தியப் பொருளாதாரம் பொறுத்துக்கொள்ளக்கூடிய வேகத்தில் மற்றும் பணவீக்க அழுத்தங்கள் இல்லாமல் வளர்ந்து வருகிறது என்பதே.

உயர்ந்த வளர்ச்சி மற்றும் கட்டுப்படுத்தக் கூடிய பணவீக்கம் காரணமாக நிலைத்தன்மையின் தூணாக இந்தியா விவரிக்கப்படுகிறது. இந்தியாவின் வேகமான ஏஐ வளர்ச்சியும், தொழில்நுட்ப முதலீடுகளும், இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் திறனை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐஎம்எஃப், உலகளாவிய சராசரி வளர்ச்சி 3.1% முதல் 3.2% வரை இருக்கும் என கணித்துள்ளது. இந்தியாவுக்கான கணிப்பு 2025–26 நிதியாண்டில் 6.6% ஆக உள்ளது. எனினும், கடந்த காலாண்டு தரவு வலுவாக இருப்பதால் 7.2% வளர்ச்சி சாத்தியம் என்கிறது. இந்தியா G20 அமைப்பில் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக உள்ளது.

இந்திய பொருளாதாரம் உலக சராசரி வளர்ச்சியைப் போல 2 மடங்கு வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில், அனைத்து அறிக்கைகளிலும் இந்தியா உலகின் முதன்மை வளர்ச்சி இயந்திரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



உலகளாவிய வர்த்தக தடைகள், குறிப்பாக அமெரிக்காவின் சுங்கவரி, கவலைக்குரியவை என்றாலும், இந்தியாவின் உள்நாட்டு தேவை, டிஜிட்டல் அடித்தளம் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் வளர்ச்சியைத் தொடர்ந்து முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி 16-ம் தேதி, அந்நியச் செலாவணி கையிருப்பு 701.36 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. இது 11 மாதங்களுக்கான சரக்கு இறக்குமதி செய்வதற்குப் போதுமானதாகும்.

### ரூபாய் மதிப்பு குறைவு

இருந்தபோதிலும் ரூபாய் மதிப்பு குறைந்து வருகிறது. காரணம், நம்பிக்கை குறைவு என்பதுதான். வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர் (FPI) வெளியேற்றம், அதிக அளவிலான மூலதனத் திரும்பப் பெறுதலை இந்தியா சந்தித்துள்ளது. ரூபாய் மதிப்பை நிலை நிறுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சமீபத்தில் ஒரு தொலைக்காட்சிக்கு ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா அளித்த பேட்டியில், நாணயத்தின் மதிப்பு மாற்றம் மட்டும் பொருளாதார வலிமையை வரையறுக்காது என தெரிவித்தார். மதிப்பிழப்பு போட்டித் திறனை அதிகரிக்கிறது. மற்ற நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 2025-ல் GDP-ல் 2% மட்டுமே. பிரேசில், தென்னாப்பிரிக்கா, மெக்சிகோ போன்ற நாடுகளைவிட இந்தியாவின் பேரியல் பொருளாதார குறிகாட்டிகள் (Macroeconomic Indicators) வலிமை, உறுதியானவை. இருந்தும் சந்தைகள் பதற்றத்தில் உள்ளன.

இந்தியா பிற பொருளாதாரங்களைவிட பின்தங்கவில்லை. எனினும் நம்பிக்கை சிதைவுக்கு முக்கிய காரணம் அமெரிக்கா-இந்தியா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் தாமதமாவது தான். எனவே, மத்திய அரசு உலகின் முன்னணி தனியார் துறை அமைப்புகளைக் கவர்ந்திழுக்கவும், இந்தியப் பொருளாதாரத்தில் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் டாவோஸ் நகரில் நடைபெற்ற (ஜனவரி 19-23) வருடாந்திர டபிள்யூ.இ.எஃப் மாநாட்டில் பங்கேற்க மிகப்பெரிய தூதுக்குழுவை அனுப்பியது. குறிப்பாக மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் மற்றும் பெரு நிறுவனத் தலைவர்கள் கலந்துகொண்டனர். தொழில்நுட்பம், தொழில் மற்றும் மாநில அளவிலான நிர்வாகத்தை வெளிப்படுத்துவதில் நன்றாகத் திட்டமிட்ட முயற்சி இது.

டாவோஸ் 2026 கூட்டத்தில் வர்த்தகப் போர் முக்கிய கருப்பொருளாக இருந்தது. ஐரோப்பியத் தலைவர்களும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களும் அமெரிக்க அதிபர் ட்ரம்பால் ஏற்பட்டுள்ள உலகளாவிய வர்த்தக சீர்குலைவு, அட்லாண்டிக் கடல் கடந்த உறவுகளை இறுக்குவது, விநியோகச் சங்கிலி சீர்குலைவு குறித்த அச்சங்களை வெளிப்படுத்தினர். ஐரோப்பிய மற்றும் ஆசிய பங்கேற்பாளர்கள் அமெரிக்காவை நம்பியில்லாத வர்த்தகத்தை வளர்ப்பதில் இனிமேல் கவனம் செலுத்த வேண்டும் என்ற உணர்வோடு திரும்பினர்.